D

# அறிவித்தல்

வாய்மூல விடைக்கான வினாக்களின் இறுதியில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27(2) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமென்று தொடர்பில் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் தலைவரொருவரினால் கேட்கப்படும் வினாக்களுக்கு அமர்வு இடம்பெறும் தினத்தில் கணிசமான நேரம் செலவிடப்படுகின்றமை மற்றும் அதன்மூலம் பொது அலுவல்களுக்கு போதிய நேரம் கிடைக்காமையினால் ஏற்படும் தடைகள் தொடர்பில் 2023.10.06 ஆம் திகதியன்று இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.

இதன்பிரகாரம், பாராளுமன்ற பொது அலுவல்களுக்கு தொடர்ந்தும் நேரம் போதாமைக்கான பிரச்சினை தொடர்பில் விசேட கவனம் செலுத்திய குழு, இதன் பின்னர் நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேட்கப்படும் கேள்வியொன்றுக்காக கேள்வி கேட்பதற்கும் விடையளிப்பதற்குமாக 15 நிமிடங்களை மாத்திரமே ஒதுக்குவதற்கு தீர்மானித்ததாக இந்த கௌரவ சபைக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.